5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

*1. 1981-ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுபான (உரிமம் மற்றும் அனுமதி) விதிகளில் சில திருத்தங்கள் செய்யப்பட்டது குறித்து மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் 20-3-2001-ஆம் நாளிட்ட 59-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1937-ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

2. 1996-ஆம் ஆண்டு தமிழ்நாடு பேரூராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகள் (தொகுதிகள் சீரமைப்பு அல்லது பிரித்தல் மற்றும் ஒதுக்கீடு) விதிகளில் சில திருத்தங்கள் செய்தது குறித்து நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் 18-6-2001-ஆம் நாளிட்ட 85-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1920-ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1920) 304(2) பிரிவு, 1919-ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 4/1919) 348(d) பிரிவு, 1971 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1971) 432(2) பிரிவு, 1981-ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 25/1981) 431(2) பிரிவு, 1994 ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/1994) 11(3) பிரிவு, 1994-ஆம் ஆண்டு திருநெல்வேலி மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 28/1994) 11(3) பிரிவு மற்றும் 1994-ஆம் ஆண்டு சேலம் மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 29/1994) 11(3) பிரிவு ஆகிய பிரிவுகளின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS
வாய்மையே வெல்லும்

3. 1996-ஆம் ஆண்டு தமிழ்நாடு பேரூராட்சிகள், நகராட்சி மற்றும் மாநகராட்சி மன்றங்கள் (தேர்தல்கள்) விதிகளில் சில திருத்தங்கள் செய்தது குறித்து நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் 18-6-2001-ஆம் நாளிட்ட 86-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1920-ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1920) 304(2) பிரிவு, 1919-ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 4/1919) 348(d) பிரிவு, 1971 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1971) 432(2) பிரிவு, 1981-ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 25/1981) 431(2) பிரிவு, 1994 ஆம் ஆண்டு

2002 மார்ச் 12]

திருச்சிராப்பள்ளி மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/1994) 11(3) பிரிவு, 1994-ஆம் ஆண்டு திருநெல்வேலி மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 28/1994) 11(3) பிரிவு மற்றும் 1994-ஆம் ஆண்டு சேலம் மாநகராட்சிச் சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 29/1994) 11(3) பிரிவு ஆகிய பிரிவுகளின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

4. திரு. R. கிருஷ்ணமூர்த்தி, S/o. K.L. நாராயணப்பிள்ளை 30-cc ரோடு, சேலம்-1 அவர்களுக்கு சொந்தமான TN 27-A 6363 பதிவு எண் கொண்ட ஆம்னி பஸ்-க்கு டிசம்பர் 1994, மார்ச் 1995 மற்றும் ஜூன் 1995 ஆகிய மாதங்களில் முடிவடையும் காலாண்டுகளுக்கு செலுத்தப்படவேண்டிய தொகை ரூ. 1.67 இலட்சம் (ரூபாய் ஒரு இலட்சத்து அறுபத்து ஏழாயிரம்) வசூலிக்க இயலா நிலுவை வரித் தொகை (ரூபாய் 0.44 இலட்சம்) மற்றும் தண்டத் தீர்வைத் தொகை ரூ. 1.23 இலட்சம்) ஆகியவற்றைத் தள்ளுபடி செய்தது குறித்து உள் துறையின் 14-8-2001 ஆம் நாளிட்ட, 764 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (1974-ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரிவிதிப்புச் சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

5. சென்னை-7, மனநலம் குன்றிய குழந்தைகள் பள்ளி, பாலர் கல்வி நிலையம், நெ. 5 மற்றும் 6 ரித்தர்டன் ரோடு நிறுவனத்திற்குச் சொந்தமான TN 01 J 5974 பதிவு எண் கொண்ட மகேந்திரா வேன் வாடகைக்கு விடாமல் மக்கள் பணிக்காக பயன்படுத்தும் நிபந்தனைக்குட்பட்டு மேற்படி நிறுவனம் செலுத்தப்பட வேண்டிய வரித் தொகை அறிவிக்கை வெளியிடப்பட்ட நாளிலிருந்து ஐந்தாண்டு காலத்திற்கு ஐம்பது சதவீதமாக குறைப்பது குறித்து உள் துறையின் 18-7-2001-ஆம் நாளிட்ட, 671-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்புச் சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

6. கரூர், திரு. எஸ். பழனிச்சாமி, S/o. சுப்பையா கோனார் அவர்களுக்குச் சொந்தமான TNG 9993 எண் கொண்ட சரக்கு வண்டிக்கு 30-6-1994 மற்றும் 31-12-1994-ஆம் நாட்களுடன் முடிவடையும் காலாண்டுகளுக்குச் செலுத்தப்பட வேண்டிய ரூ. 5,310 (ரூபாய் ஐயாயிரத்து முன்னூற்று பத்து) வசூலிக்க இயலா நிலுவை வரித் தொகை ரூ. 2,655 மற்றும் தண்டத் தீர்வைத் தொகை ரூ. 2,655 ஆகிய தொகையினை தள்ளுபடி செய்தது குறித்து உள் துறையின் 25-7-2001-ஆம் நாளிட்ட, 687-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்புச் சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

7. சென்னை-81, தண்டையார்பேட்டை, ரெட்டைக்குழித் தெரு, தமிழ்நாடு பார்வையற்றோர் சங்கத்திற்குச் சொந்தமான TN 04 X 5165 பதிவு எண் கொண்ட மோட்டார் வாகனம் வாடகைக்கு விடாமல் மக்கள் பணிக்காக பயன்படுத்தும் நிபந்தனைக்குட்பட்டு மேற்படி வாகனத்திற்கு மேற்காணும் சங்கம் செலுத்தப்பட வேண்டிய வரித் தொகையினை அறிவிக்கை வெளியிடப்பட்ட நாளிலிருந்து 50 சதவீதமாக ஐந்தாண்டு காலத்திற்கு குறைப்பது குறித்து உள் துறையின் 25-7-2001-ஆம் நாளிட்ட 688-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1974-ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்புச் சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

8. திண்டுக்கல் மாவட்டம், காந்திகிராமம், காந்திகிராம ஊரக நிறுவன பல்கலைக் கழகத்திற்குச் சொந்தமான TN 57D 4278 மற்றும் TN 57D 4279 பதிவு எண்கள் கொண்ட மோட்டார் வாகனங்கள் வாடகைக்கு விடாமல் பயன்படுத்தும் நிபந்தனைக்குட்பட்டு மேற்படி நிறுவனம் செலுத்தப்படவேண்டிய வரித் தொகையை அறிவிக்கை வெளியிடப்பட்ட நாளிலிருந்து ஐந்தாண்டு காலத்திற்கு 50 சதவீதமாக குறைப்பது குறித்து உள் துறையின் 25-7-2001 ஆம் நாளிட்ட 689-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1974-ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்புச் சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

9. 1985-ஆம் ஆண்டு தமிழ்நாடு போதை மருந்துகள் விதிகளில் சில திருத்தங்கள் செய்தது குறித்து மது விலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் 20-2-2001-ஆம் நாளிட்ட 48-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1985-ஆம் ஆண்டு போதை மருந்துகள் மற்றும் மனமயக்கப் பொருட்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 61/1985) 78(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

10. 1955-ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் வருமான வரி (மேல்முறையீடு மற்றும் மறு ஆய்வு) விதிகளில் திருத்தம் செய்தது குறித்து வருவாய்த் துறையின் 20-3-2001-ஆம் நாளிட்ட 131-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1955-ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் வருமான வரிச் சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 5/1955) 61(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

11. சென்னை-600106, திருவாளர்கள் உதவும் கரங்கள், நெ. 460, என்.எஸ்.கே. நகர். சொந்தமான TN 02 D 8445 மற்றும் TN 02 E 2648

பதிவு எண்கள் கொண்ட மோட்டார் வாகனங்கள் வாடகைக்கு விடாமல் மக்கள் பணிக்காக பயன்படுத்தும் நிபந்தனைக்குட்பட்டு மேற்படி வாகனத்திற்கு மேற்காணும் நிலையம் செலுத்தப்பட வேண்டிய வரித் தொகையினை அறிவிக்கை வெளியிடப்பட்ட நாளிலிருந்து ஐந்தாண்டு காலத்திற்கு *50* சதவீதமாக குறைப்பது குறித்து உள் துறையின் *26-7-2001* ஆம் நாளிட்ட *697*-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (*1974*-ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்புச் சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் *13/1974*) *25(2)* பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

12. நீலகிரி மாவட்டம், குன்னூர், இந்திய குடும்ப நல திட்டத்திற்குச் சொந்தமான TN *43A 0504* பதிவு எண் கொண்ட வண்டி வாடகைக்கு விடாமல் மக்கள் பணிக்காக மட்டும் பயன்படுத்தும் நிபந்தனைக்குட்பட்டு மேற்படி வண்டிக்கு மேற்காணும் நிலையம் செலுத்தப்பட வேண்டிய வரியினை அறிவிக்கை வெளியிடப்பட்ட நாளிலிருந்து *5* ஆண்டு காலத்திற்கு ஐம்பது சதவீதமாக குறைப்பது குறித்து உள் துறையின் *22-6-2001*-ஆம் நாளிட்ட *578*-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (*1974*ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்புச் சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் *13/1974*) *25(2)* பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

13. முந்தைய, திருவாளர்கள் கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்திற்குச் சொந்தமான *125* மோட்டார் வாகனத்திற்கு *1978-1979* ஆம் ஆண்டிற்கான ரூ. *62,93,812* வசூலிக்க இயலாத வரியான ரூ. *44,95,580/-* மற்றும் நாற்பது சதவீத கூடுதல் மேல்வரி (ரூ. *17,98,232*) வரித் தொகையை தள்ளுபடி செய்தது குறித்து உள் துறையின் *28-8-2001* ஆம் நாளிட்ட *806* ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (*1974*-ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்புச் சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் *13/1974*) *25(2)* பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

14. TML *9260* பதிவு எண் கொண்ட வண்டிக்கு *1-4-1999* முதல் *30-6-2000* வரையிலான காலத்திற்கு செலுத்தப்பட வேண்டிய காலங்கடந்த வரியினை சென்னை, அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தினால் செலுத்தப்பட வேண்டிய தண்டத் தீர்வைத் தொகை ரூ. *6,875*-ஐ தள்ளுபடி செய்தது குறித்து உள் துறையின் *18-9-2001* ஆம் நாளிட்ட *879*-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (*1974*-ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்புச் சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் *13/1974*) *25(2)* பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

[2002 மார்ச் 12

15. 1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்டச் சட்டப் பணிகள் குழு விதிகளில் திருத்தம் செய்தது குறித்து உள் துறையின் 10-1-2001 ஆம் நாளிட்ட 35 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1987ஆம் ஆண்டு சட்டப் பணிகள் அதிகார மன்றச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 39/1987) 30(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

16. 1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் பயறு மற்றும் பருப்பு வகைளின் மாவு விற்பனை மீது எந்த ஒரு வணிகரும் செலுத்தத்தக்க வரிவீதத்தை நான்கு சதவீதத்திலிருந்து இரண்டு சதவீதமாகக் குறைப்பது குறித்தும் மற்றும் நெய் தயாரிப்பதற்காக வணிக முத்திரையிடப்படாத வெண்ணெய் வாங்குவதன் மீது, 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் 7-ஏ ஆம் பிரிவின்கீழ் எந்த ஒரு வணிகரும் வரி செலுத்துவதினின்றும் விலக்களிப்பது குறித்தும் வணிக வரிகள் துறையின் 24-9-2001 ஆம் நாளிட்ட 82 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். (1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

17. சென்னை, தமிழ்நாடு விற்பனை வரி மேல்முறையீட்டு (முதன்மை அமர்வு) தீர்ப்பாயத்தின் இரண்டாம் உறுப்பினரான திரு. ட்டி. நூர் மொகையுதீன் (இந்திய தணிக்கை மற்றும் கணக்குப் பணி) என்பவரின் வேற்றுப் பணிக் காலத்தினை 1-9-2001 முதல் 31-8-2002 முடிய மேலும் ஓராண்டு காலத்திற்கு நீட்டிப்பு செய்தது குறித்து வணிக வரிகள் துறையின் 30-8-2001 ஆம் நாளிட்ட அரசாணை (3டி) எண். 33-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1959ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

18. 1964 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய நிறுவனங்கள் (அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள்) பணி விதிகளில் சில திருத்தங்கள் செய்தது குறித்து தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறையின் 1-8-2001 ஆம் நாளிட்ட 163 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறநிலையக் கொடைகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 22/1959) 116(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

19. 1966 ஆம் ஆண்டு தமிழ்நாடு கட்டடங்கள் (உரிமம்) விதிகளில் திருத்தம் செய்தது குறித்து நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்

துறையின் 16-7-2001 ஆம் நாளிட்ட 97ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1965ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது கட்டடங்கள் (உரிமம்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1965) 25(4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

20. மோட்டார் மிதியுந்துகளுக்கு செலுத்தப்படும் வரியினை 20-2-2001 அன்று முதல் வரி குறைப்பு செய்தது குறித்து உள் துறையின் 19-2-2001 ஆம் நாளிட்ட 147 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1974-ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

21. பாதுகாப்புப் படையைச் சேர்ந்த பணியாளர்கள் மாற்றல் ஆகி பார்வர்டு ஏரியாவிற்கு செல்லும்போது, அவர்கள் 1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வண்டிகள் உள்ளூர்ப் பகுதிகளில் நுழைவதற்கான வரிச் சட்டத்தின்கீழ் செலுத்தத்தக்க மொத்த வரியிலிருந்து அவர்களுக்கு விலக்களிப்பது குறித்து வணிக வரிகள் துறையின் 31-8-2001 ஆம் நாளிட்ட 75 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1990ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வண்டிகள் உள்ளூர்ப் பகுதிகளில் நுழைவதற்கான வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1990) 18(4) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

22. 1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு கருப்பஞ்சாற்றுக் கசண்டு கட்டுப்பாடு மற்றும் ஒழுங்குமுறை விதிகளில் திருத்தம் செய்தது குறித்து மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் 29-10-2001 ஆம் நாளிட்ட 233 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1937-ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

23. 1968 ஆம் ஆண்டு தமிழ்நாடு முத்திரை (ஆவணங்களின் மதிப்புக் குறைத்தலைத் தடுத்தல்) விதிகளில் சில திருத்தங்கள் செய்தது குறித்து வணிக வரிகள் துறையின் 9-3-2001 ஆம் நாளிட்ட 35 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1899 ஆம் ஆண்டு இந்திய முத்திரைச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் II/1899) 75-ஏ(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

24. 27-1-1999 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்ட மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் எஸ்.ஆர்.ஓ.ஏ-5/99 ஆம் எண் அறிவிக்கையில் திருத்தம் செய்தது குறித்து மதுவிலக்கு மற்றும்

ஆயத்தீர்வைத் துறையின் 19-11-2001 ஆம் நாளிட்ட 241 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1937ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

25. 2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரி (திருத்தச்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 13/2001) 1-11-2001 முதல் செயலுக்கு வரும் நாளாக குறிப்பிடுவது குறித்து வணிக வரிகள் துறையின் 1-11-2001 ஆம் நாளிட்ட 98 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1970ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 14/1970) 4(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

26. மேலாண் பொறுப்பாட்சியர், காயத்ரி பொறுப்பாட்சி, குரோம்பேட்டை, சென்னை-600 044-க்கு சொந்தமான TN 22 0002 மற்றும் TN 22 பி 7008 (Mortuary Van) பதிவு எண்கள் கொண்ட மோட்டார் வாகனங்களை வாடகைக்கு விடாமல் மக்கள் பணிக்காக பயன்படுத்தும் நிபந்தனைக்குட்பட்டு மேற்படி வாகனங்களுக்கு அந்த டிரஸ்ட் செலுத்தப்படவேண்டிய வரித் தொகையினை அறிவிக்கை வெளியிடப்பட்ட நாளிலிருந்து ஐம்பது சதவீதமாக குறைப்பது குறித்து உள் துறையின் 17-10-2001 ஆம் நாளிட்ட 1038 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின்கீழ் பேரவவைமுன் வைக்கப்பெற்றது].

27. இயக்குநர், சமூகத் தொண்டு மையம், கணபதி நகர், வண்டலூர், சென்னை-600 048-க்கு சொந்தமான TN 21 U 2662 பதிவு எண் கொண்ட மோட்டார் வாகனத்தை வாடகைக்கு விடாமல் மக்கள் பணிக்காக பயன்படுத்தும் நிபந்தனைக்குட்பட்டு மேற்படி வாகனத்திற்கு மேற்படி நிறுவனம் செலுத்தப்படவேண்டிய வரித் தொகையினை அறிவிக்கை வெளியிடப்பட்ட நாளிலிருந்து ஐந்தாண்டு காலத்திற்கு ஐம்பது சதவீதமாக குறைப்பது குறித்து உள் துறையின் 17-10-2001 ஆம் நாளிட்ட 1039 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1974ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

28. கடலில் மீன்வளத்தைப் பாதுகாக்கும் நோக்குடன், தமிழ்நாட்டின் கிழக்குக் கடல் நெடுகிலும் உள்ள பகுதி முழுவதிலும், அதாவது திருவள்ளூர் வருவாய் மாவட்டத்திலிருந்து கன்னியாகுமரி நகரம்

வரையிலான கடல் பகுதியில், ஒவ்வோர் ஆண்டிலும் 45 நாட்கள், அதாவது ஏப்ரல் திங்கள் 15 ஆம் நாள் முதல் மே திங்கள் 29 ஆம் நாள் வரையிலான (இரு நாட்களும் உட்பட) கால அளவில் விசைப்படகுகள்/இழுவைப் படகுகள் மூலம் மீன் பிடிப்பதை தடை செய்தது குறித்து கால்நடை பராமரிப்பு மற்றும் மீனளத் துறையின் 5-1-2001 ஆம் நாளிட்ட 5 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடல் மீன்பிடிப்பு முறைப்படுத்துதல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/1983) 26(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

29. கடலில் மீன் வளத்தைப் பாதுகாக்கும் நோக்குடன் தமிழ்நாட்டின் மேற்கு கடல் நெடுகிலும் உள்ள பகுதி முழுவதிலும், அதாவது கன்னியாகுமரி மாவட்டத்தில் கன்னியாகுமரியிலிருந்து நீரோடி கிராமம் வரையிலான கடல் பகுதியில், ஒவ்வோர் ஆண்டிலும் 45 நாட்கள் அதாவது ஜூன் திங்கள் 15 ஆம் நாள் முதல் ஜூலை திங்கள் 29 ஆம் நாள் வரையிலான (இரு நாட்கள் உட்பட) கால அளவில் விசைப்படகுகள்/இழுவைப் படகுகள் மூலம் மீன்பிடிப்பதை தடை செய்தது குறித்து கால்நடை பராமரிப்பு மற்றும் மீனளத் துறையின் 5-1-2001 ஆம் நாளிட்ட 6 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1983ஆம் ஆண்டு தமிழ்நாடு கடல் மீன்பிடிப்பு முறைப்படுத்துதல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/1983) 26(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

30. 2000-2001 ஆம் ஆண்டிற்கான அயல் நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தின் இருபத்தி மூன்றாவது ஆண்டறிக்கை. [1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

31. 2000-2001 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சரிகை லிமிடெட்டின் இருபத்தி ஒன்பதாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

32. 1998-99 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு முன்னாள் படைவீரர் கழகத்தின் பதினான்காவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

[2002 மார்ச் 12

33. 2000-2001 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு திரைபப்பட வளர்ச்சிக் கழகத்தின் இருபத்தி ஒன்பதாவது ஆண்டறிக்கை. [*1956* ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் *1/1956*) *619*-ஏ பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

34. 2000-2001 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மாநில வாணிப கழகத்தின் பதினெட்டாவது ஆண்டறிக்கை. (தமிழ்நாடு சாராவி கழகத்தின் பன்னிரெண்டாவது ஆண்டறிக்கை உள்ளிட்டது]. [*1956* ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் *1/1956*) *619*-ஏ பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்].

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

1. 2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் *6/2001*).

2. 2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் *7/2001*).

3. 2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்த) அவசரச் சட்டம் தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 8/2001].

4. 2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகரமைப்பு மற்றும் ஊரமைப்புத் திட்ட (இரண்டாம் திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் *9/2001*].

5. 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரிவிதிப்பு (திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் *1/2002*).

6. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் ஆளுநர் உரையாற்றும்போது பின்பற்ற வேண்டிய ஒழுங்குமுறை பற்றிய புத்தகம் (தமிழ், ஆங்கிலம்).

7. 2002 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் *9* ஆம் நாள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரை (தமிழ், ஆங்கிலம்).

8. அரசு உறுதிமொழிக் குழுவின் முதலாவது அறிக்கை (*2001-2002*)

9. அரசு உறுதிமொழிக் குழுவின் இரண்டாவது அறிக்கை (*2001-2002*)